# அனைத்து கிராம அலுவலர்கள் / கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு,

## தேருநர் இடாப்பு மீளாய்வு - 2021

கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக ஊரடங்குச் சட்டம் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை மற்றும் அரச அலுவலகங்கள் இயங்கும் தினங்கள் வரையறுக்கப்பட்டமையின் கீழ் 2020 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரையான அலுவல்களை அலுவலர்களின் அர்ப்பணிப்புடனான கருமமாற்றல் காரணமாக நிறைவு செய்ய முடியுமாகியது. கொவிட் 19 தொற்று நோய் இடைக்கிடை தலைதூக்கும் நிலைமையின் கீழ் தேருநர் இடாப்பு மீளாய்வு அலுவல்களை இதற்கு முன்னைய ஆண்டுகளில் மேற்கொண்ட விதத்தில் கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று பி.சீ. படிவங்களை கையளித்தல் மற்றும் மீளப் பெற்றுக்கொள்ளும் முறையை மேற்கொள்ளாதிருப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**02.** நடப்பு தேருநர் இடாப்பிலிருந்து நீக்கப்படவிருக்கும் வாக்காளர்கள் மற்றும் உட்சேர்க்கப்படவிருக்கும் வாக்காளர்கள் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் ஊடாக “அ” மற்றும் “ஆ” நிரல்களை தயாரித்தலும் சில வரைவு சந்தர்ப்பங்களின் ஊடாக தரவுகளை இற்றைப்படுத்தலைப் போன்றே தரவுகளை இற்றைப்படுத்துவதற்காக குறித்த தகவல்களை பல்வேறு அரச நிறுவனங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்வதனூடாக மீளாய்வு அலுவல்களை மேற்கொண்டு 2021 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்டுள்ளது.

**03.** 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) பிரிவிற்கமைய 2021 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் பணி 2021 யூன் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென 2021.06.01 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டில் யூன் மாதம் 01 ஆம் திகதி வாக்காளர்கள் தகைமை பெற்றுக்கொள்ளும் திகதியாகக் கவனத்திற்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 04. 2021/ நுசு படிவத்தை விநியோகித்தல் மற்றும் சேகரித்தல்.

**4.1** 2021 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பு மீளாய்வின்போது வாக்காளர்களை கணக்கெடுப்பதற்கு விசேட படிவமொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன் அந்தப் படிவம் **2021/** ER என அறிமுகப்படுத்தப்படுகின்றது. அந்தப் படிவம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அதி விசேட அறிவுறுத்தல் பத்திரத்தை பொது மக்கள் கோரும் சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**4.2** **2021/** ER படிவத்தை முன்னைய கிராம அலுவலர் பிரிவின் A மற்றும் B பெயர்களின் எண்ணிக்கையைக் கவனத்திற்கொண்டு மாவட்ட தேர்தல் அலுவலகங்களினால் கணக்கெடுப்பு அலுவலர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும். பொது மக்கள் கோரும் சந்தர்ப்பங்களில் படிவங்களை வழங்குதல் வேண்டுமென்பதோடு, தொலைபேசி அழைப்புக்கள் ஊடாக அல்லது வேறு தொடர்பாடல் ஊடகமொன்றின் ஊடாக ER படிவங்களைக் கோரும்போது குறித்த வீட்டிற்கு அதனை கிடைக்கப்பெறச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தோடு பிரிவிற்கு / வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு புதிதாக வதிவுக்காக வந்துள்ள நபர்கள் சம்பந்தமாக கண்டறிந்து அவர்களுக்கு ER படிவங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**4.3** தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாக இந்தப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வாறு பதவிறக்கம் செய்து பூரணப்படுத்தி தங்களிடம் கையளிக்கப்படும் ER படிவங்களையும் குறித்த நபர்களின் சாதாரண வதிவிடம் உரிய திகதியன்று உறுதிப்படுத்தப்படுமாயின் அந்த நபர்களின் பெயர்களை கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

## 05. வாக்காளர்களின் தகைமைகள

தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 9 (3) பிரிவின் கீழ் வாக்கெடுப்புப் பிரிவுகளில் தற்போது செல்லுபடியாக நிலவும் வாக்கெடுப்பு மாவட்டங்களுக்குரிய கிராமப் பிரதேசங்கள் / வீதிகளை சரியாக இனங்கண்டு அவற்றின் கீழ் வாக்காளர்களைக் கணக்கிட்டு, மீளாய்வு நடவடிக்கைகளை கணக்கெடுப்பு அலுவலர்கள் நிறைவு செய்தல் வேண்டும்.**“உள்ளூராட்சி அதிகார நிறுவனமொன்று வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக பிரசித்தப்படுத்தப்பட்ட தெரு / வீதி 9 (3) அறிவித்தலில் உள்ளடக்கப்படவில்லையாயின் தற்போது காணப்படும் ஏற்புடைய ஊர் / வீதியுடன் அடைப்புக்குறிக்குள் அந்த வீதி / வீதியை உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.”**இங்கு தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம் மற்றும் அரசியலமைப்பின் தொடர்பான ஏற்பாடுகளையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். **விசேடமாக வாக்குரிமையானது மக்கள் இறைமையின் கீழ்கொள்ளப்படுமெனவும், வாக்குரிமையை நடைமுறைப்படுத்துவதற்காக தேருநர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு அரசியலமைப்பின் 89 ஆவது உறுப்புரைப் பிரகாரம் வாக்காளர் ஒருவராகுவதற்கான தகைமையீனங்களினதும் அடிப்படையிலாகும்.**விசேடமாக பதிவு ஊடாக பிரஜாவுரிமையை பெற்றுக்கொண்ட நபர்களைப் போன்றேபிரஜாவுரிமையை வழங்குவதற்கான சட்டத்திற்கமைய பிரஜாவுரிமை கிடைக்கும் நபர்கள் தொடர்பாகவும் விசேடமாக கவனத்தைச் செலுத்தல் வேண்டும்.

## 06. ஆட்களின் (நபர்களின்) வயது

**6.1** தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக மீளாய்வாண்டின் யூன் மாதம் 01 ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியாகும் நபர்களே தகைமை பெறுகின்றனர். அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் மீளாய்வின்போது 2021 யூன் 01 ஆம் திகதியன்று 18 வயது பூரத்தியடைவதற்கு **குறித்த நபர்கள் 2003 மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களாக இருத்தல் வேண்டும்.** வயது பூர்த்தியடைதல் காரணமாக (ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள) புதிதாக இந்த ஆண்டில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்காக எவரேனுமொருவரின் தகவல்களை பிரதான குடியிருப்பாளர் முன்வைத்திருப்பின் பிறப்புச் சான்றிதழ் / தேசிய அடையாள அட்டையை பரிசீலித்து ER படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வாறான பிறந்த திகதிகள் சம்பந்தமாக கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

**6.2** 18 வயது பூர்த்தியடைந்து இரண்டு, மூன்று வருடங்கள் செல்லும் வரை தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கு முடியாதுபோன நபர்களின் பெயர்களை இந்த மீளாய்வின்போது முதற் தடவையாக உட்சேர்க்கும்போது அது பற்றி கணக்கெடுப்பு அலுவலர் குறித்த ER படிவத்தில் குறிப்பொன்றை இடுதல் வேண்டும்.

## 07. வதிவிடத்தை மாற்றியதன் காரணமாக பிறிதொரு இடத்தில் புதிதாகப் பதிவு செய்வதற்குக் கோரும் நபர்கள்

நடப்பு நேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிராத குடும்பமொன்று ஏதேனுமொரு முகவரியின் கீழ் புதிதாக பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதாயின் அவர்கள் யூன் 01 ஆம் திகதியாகும்போது அந்த முகவரியில் வசிப்பதற்கு வந்திருத்தல் வேண்டும். மேலும், அவர்கள் இதற்கு முன்னர் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொண்டுள்ள இடம் அல்லது வசித்த இடம் சம்பந்தமாக விடயங்களை அறிந்துகொள்ளுதல் கணக்கெடுப்பு அலுவலர்களின் பொறுப்பாகும். இறுதியாக வாக்காளராக பதிவு செய்திருந்த முகவரியை ER படிவத்தில் 5 ஆவது நிரலில் குறிப்பிடுதல் வேண்டும்.

**7.1** முன்னைய பதிவு சம்பந்தமான விபரங்கள் பற்றி அறிவிப்பதற்காக வெளியிடப்படும் கடிதமொன்று (**மாதிரிக் கடிதம்** - 1) ஊடாக இறுதியாக வாக்காளர் ஒருவராக பதிவு செய்துகொண்டிருந்தமை சம்பந்தமாக விபரங்களடங்கிய கடிதமொன்றைப் பெற்றுத் தருமாறு வாக்காளர் ஒருவர் கோருவாராயின் அவ்வாறான கடிதமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். புதிதாக கிராம அலுவலர் பிரிவுக்கு வசிப்பதற்கு வந்துள்ள நபரொருவர் அவ்வாறான கடிதமொன்றை சமர்ப்பிப்பாராயின் அதனைப் பெற்று ER படிவத்துடன் இணைத்து தேர்தல்கள் அலுவலகத்திற்கு கையளித்தல் வேண்டும். முன்னைய வதிவுடன் தொடர்பான தகவல்களை உரிய முறையில் வழங்கப்பட்டிருப்பின் கடிதமொன்று அத்தியாவசியமில்லையனெவும் கவனத்திற் கொள்ளவும்.

## 08. களக் கணக்கெடுப்பின்போது போதுமானளவு தகவல்களை வழங்குவதற்கு தவறிய நபர்களை வாக்காளர்களாக (தேருநர்களாக) பதிவு செய்தல்

நீண்ட காலமாக குறித்த முகவரியில் சாதாரணமாக வசித்தாலும் முன்னைய வசிப்பிடம் தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தவறியமையின் காரணமாக வாக்காளர் ஒருவராக பதிவு செய்வதற்கான தடைகள் ஏற்பட்டால் அவரிடமிருந்து எழுத்து மூலமான வெளிப்படுத்துகையொன்றைப் பெற்று அல்லது அவர்கள் நீண்டகாலமாக குறித்த இடத்தில் வசித்ததாக கணக்கெடுப்பாளர் குறித்த வீட்டுடன் தொடர்பான ER படிவத்தில் குறிப்பொன்றினையிட்டு கையொப்பமிடப்பட்டிருப்பின் அந்த வாக்காளர்களின் பெயர்களை அங்கீகரிக்க (ஏற்றுக்கொள்ள) முடியும்.

**08.1** தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தவறியமையின் அடிப்படையில் வயதை தீர்மானித்துக்கொள்ளல் பற்றிய சிக்கல்கள், பிரஜாவுரிமையைத் தீர்மானித்துக்கொள்வதுடன் தொடர்பான சிக்கல்கள் காரணமாக வாக்காளர் ஒருவரை பதிவு செய்வதற்கு தடைகள் ஏற்படுமிடத்து ஏற்புடைய படிவத்திற்கமைய வெளிப்படுத்தலொன்றை கட்டாயம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். களக் கணக்கெடுப்பின்போது அந்த வெளிப்படுத்துகையைப் பெற்று உதவி பதிவு செய்யும் அலுவலரிடம் சமர்ப்பித்தல் அல்லது அந்த வெளிப்படுத்துகையின் பிரதியுடன் மேன்முறையீட்டுக் காலப் பகுதியில் உரிமைக்கான கோரிக்கை விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்குமாறு வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

# 09. சாதாரண வதிவிடம்

## 09.1 குறித்த வீட்டில் சாதாரண வதிவு இருப்பதற்கான தேவைப்பாடு

வாக்காளர்களைப் பதிவு செய்யும்போது நபர்களின் பெயர்களை குடும்பங்களாக அவர்கள் வசிக்கும் முகவரிகளின் கீழ் பதிவு செய்தல் வேண்டும். ஒருவரின் சாதாரண வதிவு முகவரியாக அவர் தனது குடும்ப அங்கத்தவர்களுடன் வசிக்கும் மற்றும் தனது அன்றாட அலுவல்களை மேற்கொள்ளும் இடத்தை ஏற்றுக்கொள்ள முடியும். (குடும்ப அலகொன்று ஒரே முகவரியில் பதிவு செய்வதன் முக்கிய நோக்கம், இரட்டை மற்றும் பன்மைப் பதிவுகளைக் குறைப்பதாகும். வாக்காளர் ஒருவர் சாதாரணமாக வசிக்கும் இரண்டு முகவரிகள் அல்லது அதனிலும் அதிக எண்ணிக்கையிலான முகவரிகள் உண்மையிலேயே இருப்பின் அதில் ஒரு முகவரியில் குடும்ப அலகிலிருந்து புறம்பாக பதிவு செய்வதற்காக சட்ட ரீதியான உரிமையொன்று இருப்பதாக கவனத்தை ஈர்க்கச் செய்வதற்கு விரும்புகின்றேன். முடியுமான வரை குடும்ப அலகை ஒரு முகவரியில் பதிவு செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.) விசேடமாக எவரேனுமொருவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் கடமையொன்று காரணமாக சாதாரண வதிவிடத்திலிருந்து வெளியே சென்றிருப்பின், அது சம்பந்தமாக கவனத்தைச் செலுத்த வேண்டுமென குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தற்காலிகமாக ஏதேனுமொரு வீட்டிற்கு எந்தவொரு அலுவலுக்காகவும் குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லாத நபரொருவர் வந்திருப்பின், அவ்வாறானவர்களின் பெயர்களை பிரதான குடியிருப்பாளர் நுசு படிவத்திற்குள் உட்சேர்த்தல் கூடாது. சட்டத்தின் 4 (3) உப பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு,

- வதிவிடமல்லாத அல்லது வீடொன்று அல்லாத எந்தவொரு இடத்திற்கும் பெயர்களை உள்ளடக்காதிருத்தல்.

- வீடொன்று இருந்தாலும், அதன் உரித்துடைமை இருந்த போதிலும், சாதாரண வதிவு இல்லையெனில் பதிவு செய்யாதிருத்தல்.

- காணி உரித்துடைமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வதிவு இன்றி தேருநர் இடாப்பில் பெயர்களை உட்சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள்.

- பாடசாலைகளுக்கு பிள்ளைகளை சேர்த்துக்கொள்ளல், பல்கலைக்கழக அனுமதி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்காக வதிவை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் அரசியல்வாதிகளின் தேவைகளின் அடிப்படையில் சில வீடுகளுக்கு வதிவு இல்லாமல் பெர்களை உட்சேர்த்துக்கொள்வதற்கு முயற்சி செய்தல் போன்ற சந்தர்ப்பங்கள்.

அதற்கான வாய்ப்பினை வழங்காமல் சாதாரண வதிவு சம்பந்தமாக கவனத்தைச் செலுத்தி தீர்மானித்தல் வேண்டும்.

## 09.2 பல இடங்களில் சாதாரண வதிவிடத்தைக் கொண்டுள்ள நபர்கள்

சில சந்தர்ப்பங்களில் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கும் குடும்பங்கள் அவற்றின் கீழ் பதிவு செய்யாமல் அவர்களுக்குரிய தனிப்பட்ட வீடுகளின் கீழ் பதிவு செய்வதற்கான கோரிக்கையை முன்வைக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் சரியாயின் அந்த பிரதான குடியிருப்பாளரின் விருப்பத்திற்கு இடமளிக்க முடியும். சட்டத்தின் 4 (3) பிரிவு மீது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றேன்.

***“ஏதேனுமொரு வருடத்தின் யூன் மாதம் முதலாம் திகதியில் ஒருவரின் வதிவு சம்பந்தமாக ஏதேனும் சிக்கலொன்று சம்பந்தமாக தீர்மானமெடுக்கும்போது குறித்த முகவரியில் அவர் இருப்பு அல்லது இல்லாதிருப்பை போன்றே அவரது இருப்பு அல்லது இல்லாதிருப்புடன் தொடர்பான காரணம் மற்றும் ஏனைய சந்தர்ப்பத்திற்கேற்ற விடயங்கள் சம்பந்தமாகவும், விசேடமாக அவர் வகிக்கும் அல்லது பொறுப்பேற்றுள்ள ஏதேனுமொரு பதவி, சேவை அல்லது தொழில் காரணமாக எழும் அல்லது அந்தப் பதவிக்கு, சேவைக்கு அல்லது தொழிலுடன் தொடர்புடைய ஏதேனுமொரு அலுவலை நிறைவேற்றும்போது அந்த முகவரியில் அவர் இல்லாதிருத்தல் சம்பந்தமாகவும் விசேட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.”***

## 09.3 வர்த்தகம் புரியும் இடங்களிலேயே வசிக்கும் நபர்கள்

சில பிரஜைகள் தமக்குரிய வர்த்தகங்களை நடாத்தும் இடங்களில் வாக்காளர்களாக பதிவு செய்துகொள்வதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தக் குடும்ப அங்கத்தவர்கள் உண்மையிலேயே அந்த இடத்தில் வசிக்கின்றனரா? என்பது சம்பந்தமாக கண்டறிதல் வேண்டும். அவ்வாறான நபர்கள் அந்த இடத்தில் வசிப்பார்களாயின் அவர்களுக்கு அங்கு பதிவு செய்துகொள்வதற்கு இடமளிக்க முடியும். ஆனாலும் அவர்களுடைய ஏனைய சாதாரண வதிவிட முகவரியொன்று இருப்பின் அது தொடர்பாக விடயங்களைக் கண்டறிவதற்கு முடியுமான வகையில் அந்த விபரங்களை கணக்கெடுப்பு அலுவலர்கள் குறித்துக்கொள்ளுதல் வேண்டும்.

## 09.4 முதியோர் இல்லங்கள்

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களினால் நடாத்தப்பட்டு வரும் முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களின் பெயர்களை குறித்த இடங்களின் பொறுப்பாளர்களால் தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்காக கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது குறித்த நபர்களின் முன்னைய பதிவு தொடர்பான விபரங்களைக் குறித்துக்கொள்ளுதல் அவசியமாகும். தகைமைகளை பூர்த்தி செய்தால் அவ்வாறானவர்களின் பெயர்களை குறித்த இடங்களின் கீழ் பதிவு செய்ய முடியும்.

## 10. நடப்பு தேருநர் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்காளர்களின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் ம்றறும் ஏனைய தகவல்களின் உண்மைத்தன்மை (துல்லியத்தன்மை)

**10.1** பிரதான குடியிருப்பாளரால் பூரணப்படுத்தப்பட்ட ER படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் சரியான முறையில் உட்சேர்க்கப்பட்டுள்ளதாவென ER படிவங்களை சேகரிக்கும் சந்தர்ப்பத்தில் கணக்கெடுக்கும் அலுவலர் பரிசோதித்தல் (பரீட்சித்தல்) வேண்டும். முடியுமானவரை அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தத் தகவல்களின் உண்மைத்தன்மையை குறித்த தேசிய அடையாள அட்டைகளை பரீட்சிப்பதனூடாகவே உறுதி செய்துகொள்ளல் அவசியமாகும்.

**10.2** வாக்காளர்களை கணக்கெடுக்கும் சந்தர்ப்பத்தில் வாக்காளர் ஒருவரின் பெயரில், தேசிய அடையாள அட்டை இலக்கமொன்றில், வீட்டு இலக்கம் அல்லது பாலினத்துடன் (ஆண்.பெண்) தொடர்பாக நடப்பு தேருநர் இடாப்பில் பிழையான முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் அவை திருத்தப்பட வேண்டிய (சரி செய்யப்பட) விதத்தை 7 ஆம் இலக்க படிவத்தினூடாக கணக்கெடுப்பு அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**10.3** நபரொருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை சரியானதென உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அடையாள அட்டையின் பிரதியொன்று அவசியமில்லையென்பதுடன், இலக்கம் சரியானதென கிராம அலுவலர் குறிப்பொன்றை இட்டு கையொப்பமிடுதல் போதுமானதாகும்.

## 11. வெளிநாட்டில் வசிக்கும் வாக்காளர்கள்

தற்காலிகமாக தொழில் நடவடிக்கைகளுக்கு அல்லது கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இவ்வாறான நபர்கள் தொடர்பான தேவையான விபரங்களை இந்த நாட்டின் சாதாரண வதிவிட முகவரியின் கீழ் பிரதான குடியிருப்பாளர் சமர்ப்பிப்பாராயின் மற்றும் ஏற்புடைய அந்த விடயங்கள் சரியாயின் தகைமைகளைக் கொண்டுள்ள அவ்வாறான நபர்களை இந்த நாட்டின் சாதாரண வதிவிட முகவரியின் கீழ் பதிவு செய்வதற்கு பரிந்துரை செய்ய முடியும்.

## 12. கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் நபர்களின் பெயர்களைக் கணக்கிடுதல்.

கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் தற்போதைய / முன்னாள் பாராளுமன்ற மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைப் போன்றே ஏற்புடைய தேர்தல்களின்போது போட்டியிட்ட வேட்பாளர்களின் பெயர்கள் உட்பட்ட ஏனைய முன்னணி (முதன்மை) பிரஜைகளின் பெயர்கள் (விஹாரைகளின் தலைமைத் தேரர்கள் உட்பட்ட பூசாரிகள் / மதகுருமார்கள், நீதிமன்ற சேவையில் பணியாற்றும் நீதிபதிகள், சிரேட்ட அரச உத்தியோகத்தர்கள், பிரதேசத்தின் சங்கங்களின் (அமைப்புக்களின்) உத்தியோகத்தர்கள்) தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருக்கின்றதா என்பது சம்பந்தமாக உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறான விசேடமான (சிறப்பு) நபரொருவரின் பெயரை உட்சேர்ப்பதற்கு முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருப்பின் அல்லது தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதெனில் அல்லது மீளாய்வு ஆவணங்களை மீண்டும் தேர்தல் அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு வருகை தந்ததன் பின்னர் மாவட்ட பிரதி ∴ உதவி தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலமாக அவ்வாறான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். தகவல்கள் உள்ளடங்கிய 6 ஆம் இலக்க படிவத்திற்கமையவான அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

## 13. கடந்த மீளாய்வு நடவடிக்கைகளின்போது பதிவு செய்யப்படவில்லையென முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல்

2020 தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக முறைப்பாடுகளைச் செய்த அனைத்து நபர்கள் சம்பந்தமான தகவல்களை கணக்கெடுப்பு அலுவலர்கள் மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதோடு அந்த நபர்கள் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 14. அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

**14.1** வாக்காளர்களை கணக்கெடுத்தலுடன் தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆரம்ப கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அந்தத் தகவல்களை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

**14.1.1.** ஆட்பதிவுத் திணைக்களத்திடமிருந்து 18 வயது பூர்த்தியானவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

**14.1.2.** பதிவாளர் நாயகத்திடமிருந்து மரணித்தவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

**14.1.3.** உள்ளூராட்சி நிறுவனங்டகளிடமிருந்து மரணித்தவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

**14.2** இது தவிர பாடசாலைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதிய அலுவலகம் ஆகிய நிறுவனங்களின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**14.3** இதனூடாக குறித்த நிறுவனங்களில் காணப்படும் தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்துகொள்ளாத வாக்காளர்கள் பற்றிய தகவல்கள் எதிர்காலத்தில் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதுடன், அது சம்பந்தமாக தங்களுடைய கவனத்தை ஈர்த்து ER படிவங்களை பூரணப்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் எதிர்காலத்தில் தங்களுக்கு வழங்கப்படும்.

15. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து மூலங்களினூடாகவும் கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் ER படிவங்களை பூரணப்படுத்திக்கொள்ளுவதனையும் **2021.06.21** ஆம் திகதி முதல் **2021.07.21** ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் குறித்த பிரதிகள் மற்றும் பதிவுக்காக கோரிக்கை விடுத்துள்ள நபர்கள் தொடர்பான பரிந்துரைகளை குறித்துக்கொள்ளுதல் வேண்டும். நீக்கப்படும் மற்றும் சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து பெயர்கள் சம்பந்தமாகவும் கணக்கெடுப்பு அலுவலர் வீட்டிற்குச் சென்று பரிசீலித்து தங்களது பரிந்துரையை வழங்குதல் கட்டாயமாகும்.

## A, B நிரல்களை தாயரித்தல் முதலாவது கட்டம் A, B வரைவை தயாரித்தல்.

**16.** இந்த ஆண்டில் A, B நிரல்கள் (பட்டியல்கள்) காட்சிப்படுத்தல் இரண்டு கட்டங்களில் மேற்கொள்ளப்படும். ஆரம்ப கட்டத்தில் A, B நிரல்களின் வரைவை காட்சிப்படுத்தல் **2021.08.16** ஆம் திகதி முதல் **2021.08.27** ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும்.

17. இந்த முதலாவது கட்டத்துடன் தொடர்பாக கணக்கெடுக்கும் அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள ER படிவங்களில் A நிரலுக்கு (பட்டியலுக்கு) பரிந்துரை செய்யப்படும் பெயர்களை ER/DR-A படிவங்களின் ஊடாகவும் B நிரலுக்கு (பட்டியலுக்கு) பரிந்துரை செய்யப்படும் பெயர்களை ER/DR-B படிவங்களின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதோடு கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு ER படிவத்தினூடாக பதிவுக்காக பிரதான குடியிருப்பாளர் கோரியிருந்தாலும் பரிந்துரை செய்யப்படாத பெயர்களை ER/DR-C படிவங்களின் ஊடாகவும் பிரிவுக்குரிய பொழிப்பை ER - SM படிவத்தினூடாகவும் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இந்த கணக்கெடுப்பு அலுவலரின் கணக்கெடுப்பு ஆவணங்கள் மற்றும் A, B நிரல்களின் (பட்டியல்களின்) பிரதிகள் **2021.07.26** முதல் **2021.07.30** வரையான காலப் பகுதியினுள் பிரதேச செயலகங்களில் வாக்கெடுப்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான அலுவலர்களால் கையேற்கப்படும்.

## A, B நிரல்களை தாயரித்தல் இரண்டாவது கட்டம் நிறைவு மற்றும் முறையான A, B நிரலை தயாரித்தல்.

**18.** **2021.08.16** முதல் **2021.08.27** வரை A வரைவு மற்றும் B வரைவு காட்சிப்படுத்தப்படும். மேலும் திருத்தங்கள் தேவைப்படும் நபர்களுக்கு ER அல்லது UE படிவத்தின் ஊடாக கோரிக்கை விடுப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும். அதற்கிணங்க இரண்டாவது கட்டமாக A, B நிரலை (பட்டியலை) காட்சிப்படுத்தல் **2021.09.14** முதல் **2021.10.11** வரை மேற்கொள்ளப்படும்.

**19.** இந்த இரண்டாவது கட்டத்துடன் தொடர்பாக கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஆவணங்கள் (ER மற்றும் UE படிவங்கள் ) மற்றும் கீழ் குறிப்பிடப்படும் படிவங்களை பூரணப்படுத்தி **2021.09.03** முதல் **2021.09.07** வரையான காலப் பகுதியினுள் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

- அ / யு படிவம்
- ஆ / டீ படிவம்
- "அ " மற்றும் " ஆ " பெயர்கள் சம்பந்தமான திருத்தங்கள்.
- இலக்கம் 1 – 9 வரையான படிவங்கள்

**20.** கணக்கெடுப்புப் படிவங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் சம்பந்தமாக குறித்த பிரதேச செயலாளர்களையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அந்த ஆவணங்களை கையளித்தலை (ஒப்படைத்தலை) அனுமதியின்றி தாமதப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் மீளாய்வு ஆவணங்களை தேர்தல் அலுவலகத்திற்கு கையளிப்பதனை தாமதப்படுத்தல் காரணமாக பிரிவொன்றுக்குரிய “அ” மற்றும் “ஆ” நிரல்களை உரிய திகதியன்று காட்சிப்படுத்த முடியாத பட்சத்தில் அவ்வாறான அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

21. தேருநர் இடாப்பு மீளாய்வின்போது கணக்கெடுக்கும் அலுவலராக கடமையை மேற்கொள்ளும் கிராம அலுவலர்களின் சேவையை தேர்தல் ஆணைக்குழு பெரிதும் பெருமதிமிக்கதாகக் கருதுகின்றது.

**நன்றி!**